இன்றைய செய்தி நாளைய வரலாறு
# முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்
செவ்வாய்க்கிழமை 11-06-2024

# ஏன் மகிழ்ச்சியாக இருக்கிறோம்?

**“தோற்ற காங்கிரஸ் கட்சி ஏன் மகிழ்ச்சியாக இருக்கிறது, ‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்?” என்று கேட்கிறார் பிரதமர் மோடி. இது கூடவா அவருக்குப் புரிய வில்லை? மோடியால் ஏன் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லையோ அதனால் தான் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் மகிழ்ச்சியாக இருக்கிறது. அதுதான் உண்மை!**

370 இடங்களைக் கைப்பற்றி இந்திய ஜனநாயகக் கட்ட மைப்பை நாசப்படுத்த நினைத்திருந்தார் மோடி. அது இனி முடியாது அல்லவா? அதனால்தான் காங்கிரசும், ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

‘400 கிடைத்தால் தான் நாம் நினைத்ததைச் செய்ய முடியும்’ என்று முழங்கினார் மோடி. ஒரே நாடு - ஒரே தேர்தல் என்று சொல்லி சர்வாதிகாரத் தன்மை கொண்ட அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க நினைத்தார். அவரையே, இந்திய அரசியல மைப்புச் சட்டப் புத்தகத்தை வைத்து வணங்க வைத்து விட்டார்கள் அல்லவா? இதுதான் ‘இந்தியா’ கூட்டணியின் வெற்றியாகும். அதனால் தான் ‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

‘பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவோம்’ என்று பா.ஜ.க. எம்.பி. இந்த தேர்தலில் பரப்புரை செய்தார். “400 இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்று பிரதமர் மோடி ஏன் சொல்கிறார் என்றால், அரசியலமைப்பு சட்டத்தை நாம் மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான்” என்று பா.ஜ.க. எம்.பி.யும் முன்னாள் அமைச்சருமான அனந்த குமார் சொன்னார். ‘இந்திய அரசியலமைப்புச் சட்டம் முழுமை பெறாத ஆவணம்” என்று தமிழ்நாட்டு ஆளுநர் ரவியும் அவ்வப் போது சொல்லிக் கொண்டு இருந்தார். ஆர்.என்.ரவி ஏதோ அல்லாடி கிருஷ்ணசாமி போல பேசித் திரிந்தார். சந்திரபாபு, நிதிஷ் குமார் தயவில் ஆளும் மோடியால் இனி இது எதையும் செய்ய முடியாது.

**‘நானே ஆக்கவும் அழிக்கவும் வல்லவன்’ என்ற பெயரால் ‘மோடி கேரண்டி’ கொடுத்துக் கொண்டு இருந்தாரே மோடி, அவர் இப்போது கூட்டாட்சியைப் பற்றியும் கூட்டணி ஆட்சியைப் பற்றியும் பேசத் தொடங்கி இருக்கிறார் அல்லவா? அதனால் தான் ‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். மோடி, மோடி என்று பேசிக் கொண்டிருந்தவர், ‘கூட்டணி, கூட்டணி’ என்று பேசுகிறார். இப்போதெல்லாம் ‘தேசிய ஜனநாயகக் கூட்டணி’ என்று பேசத் தொடங்கி இருக்கிறார். பா.ஜ.க. அரசு என்று கூடச் சொல்வது இல்லை.**

“மக்களவைத் தேர்தலில் அடைந்த வெற்றிக்காக தேசிய ஜனநாயக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான கூட்டணி தேசிய ஜனநாயகக் கூட்டணி. ஏற்கனவே மூன்று முறை முழுமையாக ஆட்சி நடத்தி உள்ள இக்கூட்டணி 4 ஆவது பதவிக் காலத்தில் நுழைகிறது.” என்று தேசிய ஜனநாயகக் கூட்டணியைப் பற்றியே பேசி தனது பலவீனத்தை பலமாக மாற்ற முனைந்துள்ளார் மோடி. **இது முதல் திருப்பம் ஆகும்.**

இதுவரை தான் வைத்ததே சட்டம் என செயல்பட்டு வந்தார் மோடி. முதல் தடவையாக கருத்தொற்றுமை பற்றி அவர் பேசி இருக்கிறார். ‘ஆட்சி அமைக்க பெரும்பான்மை தேவை. அதேநேரம், அரசை நடத்த கருத்தொற்றுமை அவசியம். மத்தி யில் அரசை நடத்தும் வாய்ப்பை எங்களுக்கு மீண்டும் வழங்கி உள்ளனர். எனவே அரசை நடத்துவதில் கருத்தொற்றுமையை உறுதி செய்ய தொடர்ந்து பணியாற்றுவேன்’ என்று சொல்லி தன்முனைப்பில் இருந்து கூட்டுப் பொறுப்புக்கு இறங்கி வந்துள் ளார் மோடி. **இது இரண்டாவது திருப்பம் ஆகும்.**

இசுலாமியர்களை முடிந்தவரை இழிவுபடுத்திப் பேசினார் மோடி. இப்போது அப்படியே பல்டி அடித்துவிட்டார். ‘அனைத்து மதத்தினரும் சமம் என்ற அரசமைப்புச் சட்டத்தின் கொள்கைக் காக நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்’ என்று இப்போது பேசி இருக்கிறார் மோடி. **இது மூன்றாவது திருப்பம் ஆகும்.**

⋆ பொதுசிவில் சட்டம் கொண்டு வருவோம்.

⋆ ஒரே நாடு ஒரே தேர்தல் கொண்டு வருவோம் - இவை தான் பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையின் இரண்டு முக்கியமான கொள்கை பிரகடனங்கள். அதைப் பற்றியே மோடி பேசவில் லையே. **இதுதான் நான்காவது திருப்பம்.**

கடந்த பத்தாண்டு காலத்தில் மூன்று செயல்களில் தான் உறுதி யாக இருந்தார். அந்த மூன்றைச் செய்வதற்காகத்தான் பிரதமராக வருவதைப் போலக் காட்டிக் கொண்டார். சங் பரிவார் இடித்த இடத்தில் கோவில் கட்டுவது, காஷ்மீருக்கு தரப்பட்ட 370 சிறப்புத் தகுதியை விலக்குவது, குடியுரிமைச் சட்டத்தை அமல்படுத்துவது - ஆகிய மூன்றையும் செயல்படுத்துவதில் அவர் காட்டிய உறுதியை வேறு எதற்கும் காட்டியது இல்லை. இதனைத் தனது சாதனையாக கூட்டணிக் கட்சிக் கூட்டத்தில் சொல்லவில்லை. அவரால் சொல்ல முடியவில்லை. **இதுதான் ஐந்தாவது திருப்பம்.**

**இப்படி அவரை திருப்பித் திருப்பித் தாக்கத் தொடங்கி இருக்கி றது, நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள். ‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் மகிழ்ச்சியோடு இருக்க இதுதான் காரணம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2024) கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி ராஜா அண்ணாமலை மன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள “காலம் உள்ளவரை கலைஞர்” என்ற நவீன கண்காட்சியகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மெழுகு சிலையால் உருவாக்கப்பட் டுள்ள செல்பி பாயிண்ட்டில் (Selfie Point) புகைப்படம் எடுத்துக்கொண்டார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, பி.வில்சன், திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன், கவிஞர் பா.விஜய் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2024) சென்னையில் நடைபெற்ற திரைப்பட நடிகர் டாக்டர். வி.டி.எம். சார்லியின் மகன் அஜய்தங்கசாமி – பெர்மிசியாடெமி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு - அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நடத்தி வைத்தனர்!

## கும்பகோணம் மாநகரச் செயலாளர் - துணை மேயர் சு.ப.தமிழழகன் இல்ல மண விழா!

### அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சா.சி.சிவசங்கர் - டி.ஆர்.பி.ராஜா - சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

தஞ்சாவூர், ஜூன் 11-

கும்பகோணம் மாநகர செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழ கன் இல்ல மணவிழாவில் அமைச்சர்கள், கழக நிர்வா கிகள் கலந்துகொண்டு மண மக்களை வாழ்த்தினார்கள்.

கும்பகோணம் காமராஜ ரோடு எஸ்.இ.டி. மஹாலில் கும்பகோணம் மாநகர செயலாளரும், மாநகராட்சி துணை மேயருமான சு.ப. தமிழழகன் - ஆனந்தி தமிழ ழகன் இவர்களின் மகள் கண்மணி (எ) த.பத்மஜாவுக் கும், கும்பகோணம் அம்மா சத்திரம், கு.கலையரசு - தையல்நாயகி இவர்களின் மகன் க.குணாநிதிக்கும் நடைபெற்ற திருமண விழா வில், தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலா ளர் சு.கல்யாணசுந்தரம் வர வேற்புரையாற்றினார்.

கழக முதன்மைச் செய லாளரும், அமைச்சருமான கே.என்.நேரு, கழக அமைப் புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் திரும ணத்தை நடத்தி வைத்தனர்.

திருமண விழாவில் கழ கத்திற்காக உழைத்து வயது முதிர்ந்த கழகத்தின் மூத்த முன்னோடிகள் 15 நபர் களுக்கு 10,000 வீதம் பொற்கிழி வழங்கினார்கள். திருமண விழாவில் அமைச் சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சா.சி.சிவ சங்கர், டி.ஆர்.பி.ராஜா, சிவ. வீ.மெய்யநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செ.இராமலிங்கம், சாக் கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ., கோ.வி.செழி யன் எம்.எல்.ஏ., குட்டி இராதெட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலாளர் கள் துரை.சந்திரசேகரன் எம். எல்.ஏ., பூண்டி கே.கலை வாணன் எம்.எல்.ஏ., கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ., நிவேதா எம்.முருகன் எம். எல்.ஏ., என்.கௌதமன், சேலம் ஆர்.ராஜேந்திரன், கழக உயர்நிலை செயல்திட் டக்குழு உறுப்பினர் குத்தா லம் பி.கல்யாணம், டி.கே. ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., கழக சட்டத் திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், என்.அசோக் குமார் எம்.எல்.ஏ., க.சொ. கண்ணன் எம்.எல்.ஏ., எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திருமண விழா நிறைவில் மாநகரச் செயலாளரும், துணை மேயருமான சு.ப. தமிழழகன் நன்றி கூறினார்.

திருமண விழாவில் தஞ்சை மாநகர மேயர் சண். இராமநாதன், திருச்சி மேயர் மு.அன்பழகன், தஞசை மாவட்ட ஊராட் சிக்குழு துணைத் தலைவர் எஸ்.கே.முத்துச்செல்வம், தஞ்சை துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு. உத்திராபதி, ஒன்றியச் செய லாளர்கள் உள்ளூர் டி. கணேசன், கோ. தாமரைச் செல்வம், கூகூர் சி.அம்பிகா பதி, கோ.க.அண்ணாதுரை, தியாக.சுரேஷ்குமார், பி.எஸ். குமார், ஜெ.சுதாகர், மிசா. என்.மனோகரன், என்.நாசர், இரா.உதயசந்திரன், மாவட் டக் கழக நிர்வாகிகள் க. நசீர்முகமது, கோவி.அய்யா ராசு, ஜெ.நடராஜன், எஸ். துரைமுருகன், என்.ஜெய லெட்சுமி, மாவட்ட இளை ஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, மாநிலக் கழக நிர்வாகிகள் குத்தாலம் க.அன்பழகன், சி.இறை வன், வண்ணை அரங்கநா தன், இராம.விஜயன், க.முகில்வேந்தன், பொதுக் குழு உறுப்பினர் எல்.இரா ஜேந்திரன், கும்பகோணம் மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ்.இரவிச் சந்திரன், மா.சிவானந்தம், டி.செந்தாமரை, பகுதிச் செயலாளர்கள் இரா.செல்வ ராஜ், இரா.கல்யாணசுந்தரம், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, மு.கண்ணன், மண்டலக் குழு தலைவர்கள் இரா. அசோக்குமார், கே.என்.எஸ். ஆசைதம்பி, ஜெ.மனோ கரன், ஆர்.நரசிம்மன், நிலைக்குழு தலைவர்கள் ச.பார்திபன், சோடா கிருஷ்ணமூர்த்தி, டி.ஆர்.அனந்தராமன், ஆர்.முருகன், 15வது வட் டக் கழகச் செயலாளர் மா.கோபி, ச.கந்தன், மாவட்ட ஐ.டி.விங் துணை அமைப்பாளர் பி.காளிதாஸ், கே.குமார், டி.எஸ்.கோவிந்தராஜ், ஆர்.சிங்காரம், ஜி.கார்த்திக், எஸ்.வெங்கட், சி.சிட்டி பாபு, ஆர்.கருணாநிதி, பிபாஸ்கர், ஆர்.ரஞ்சித் உள் ளிட்ட கழக நிர்வாகிகள், குடும்பத்தினர்கள், நண்பர் கள், உறவினர்கள், தொழில திபர்கள் அனைத்து கட்சி சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக் களை வாழ்த்தினார்கள்.

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமை! திருச்சி தெற்கு மாவட்டத்தில்

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கம்!

### திருச்சி என்.சிவா எம்.பி. - கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. - பர்வீன் சுல்தானா சிறப்புரை!

திருச்சி, ஜூன் 11-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நிகழ்வாக, திருச்சி காவிரி கரை அருகில் அமைந்துள்ள நேஷனல் மேல்நிலைப்பள்ளி விளை யாட்டு மைதானத்தில் திருச்சி தெற்கு மாவட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அனைத்து மன்ற உறுப்பினர்கள் நடத்தும் ஆண்கள் மற்றும் மகளிருக் கான மாபெரும் ஐவர் கால் பந்து போட்டி மற்றும் “கலைஞர் கருத்தரங்கம்” நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பி னர் இனிகோ இருதயராஜ் வரவேற்புரையாற்றினார், மாநகர கழகச் செயலாளர் மதிவாணன் முன்னிலை வகித்தார், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை யில், கழகக் கொள்கை பரப் புச் செயலாளர் - கழக மாநி லங்களவை குழுத் தலைவர் திருச்சி என். சிவா - மாநி லங்களவை உறுப்பினர் கனிமொழி என்.வி.என். சோமு, பேராசிரியர் பர் வீன் சுல்தானா ஆகியோர் இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு கலைஞர் அவர் களின் புகழைப் போற்றி னார்கள்.

அதனைத் தொடர்ந்து காலையில் நடைபெற்ற இரு பாலருக்கான கால்பந்து விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற அணி களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், சேகரன், துணை மேயர் திவ்யா, பகுதிச் செயலாளர் மருந்துக்கடை மோகன், மாநில நிர்வாகிகள் கவிஞர் சல்மா, செந்தில், மாவட்டக் கவுன்சிலர் கருணாநிதி, ஒன்றிய பெருந்தலைவர் ஆர்.அமிர்தவள்ளி மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பெருந்திர ளாக கலந்துகொண்டு சிறப் பித்தனர்.



கும்பகோணம் மறைந்த மிசா.சு. பத்மநாபன், மதுரம் பத்மநாபன் பேத்தியும், மாநகராட்சி துணை மேயர், மாநகரச் செயலாளர் சுப.தமிழழகன், ஆனந்தி தமிழழகன் மகளுக்கும், கும்பகோணம் அம்மாசத்திரம் கு.கலையரசு, தையல்நாயகி இவர்களின் மகனுக்கும் நடைபெற்ற திருமணத்தை கழகத்தின் முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் நடத்தி வைத்து கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினார்கள். திருமண விழாவில் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சா.சி.சிவசங்கர், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.கே.ஜி.நீலமேகம், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.